# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 17.08.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் அஹ்ஸாபின் 22வது வசனத்தையும் சூரா ஆலி இம்ரானின் 32வது வசனத்தையும் ஓதினார்கள்:**

*இந்த வசனங்களின் பொருள்: எவர் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் ஈமான் கொண்டு அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுகின்றார்களோ அவர்களுக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் ரஸுலிடம் அழகிய முன்மாதிரி உள்ளது. (33:22)*

*நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்விடம் அன்பு வைத்துள்ளீர்கள் எனில் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களிடம் அன்பு செலுத்துவான். உங்களுடைய பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவான். (3:32)*

அல்லாஹ் தனது அருள்கள், வெகுமதிகளுக்கு வாரிசாவதற்காக எனது அடியார் ஆகுங்கள் என்று கூறுகிறான். எனது கட்டளைகளின்படி நடக்கக்கூடிய அடியார் ஆகுங்கள் என்று கூறுகிறான். சென்ற குத்பாவில் இதனையே குறிப்பிட்டேன்.

இறைவனது கட்டளைகளின்படி செல்வது ஒரு மனிதனை உண்மையான அப்து – அடியாரின் கூட்டத்தில் சேர்க்கிறது. அதற்காக அல்லாஹ் எண்ணற்ற கட்டளைகளை இறக்கியுள்ளான். அதன்படி செயல்படுவதற்கு மனிதன் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் ஃபல் யஸ்தஜீபூலி வல்யூமினூ பி (2:187) அதாவது எனது கட்டளைகளுக்கு லப்பைக் என்று கூறியவாறு செயல்படுங்கள். என் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் என்ற இறைவனின் கூற்றை உண்மைப்படுத்துபவராக ஆக வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் அருளுக்கு ஒரு மூஃமின் வாரிசாக முடியும். அல்லாஹ்வின் உண்மையான அடியார் ஆக வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களாக ஆக வேண்டும். அதன் மூலம் அவரது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதன் காட்சியைக் காண்பவராக வேண்டும்.

அல்லாஹ்வின் கட்டளைகளை, வழிகாட்டுதல்களை திருக்குர்ஆனில் படிக்கின்றனர்; கேட்கின்றனர். ஆனால் படிப்பதையும் கேட்பதையும் விட செயல்முன்மாதிரியில் இறைவன் அதிக தாக்கத்தை வைத்துள்ளான். அதன் மூலம் ஓர் ஆர்வம், உத்வேகம் பிறக்கிறது. ஒருவர், இன்னொருவர் மீது அன்பு வைத்திருப்பதாக வாதம் செய்கிறார் எனில், அவர் யாரை நேசிக்கிறாரோ அவருடைய ஒவ்வொரு அசைவையும் தானும் செய்வதற்கு முயற்சி செய்கிறார். பிறகு அவனது செயலின் தன்மையே மாறி விடுகிறது. மேலும் அவர் மீது அன்பு கொள்வதும் அந்த அன்பின் காரணமாக தான் நேசிப்பவரையே தனக்கு முன்மாதிரியாக்கிக் கொள்வதும் ஈமானின் ஓர் அங்கமாக இருக்கும் எனில், அந்த மூஃமினுக்கு அதை விட பெரிய விருப்பம் வேறொன்றுமில்லை; வேறு இருக்கவும் முடியாது. அவர் தனது நேசத்திற்குரியவரின் மகிழ்ச்சியுடன் தனது ஈமானையும் பாதுகாத்துக் கொள்கிறார். அதில் முன்னேறவும் செய்வார். நம்மை அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உம்மத்தில் படைத்துள்ளான். இது நமது நற்பேறு ஆகும். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின் வடிவில் இறங்கிய எல்லா கட்டளைகளுக்கும் ஓர் செயல் வடிவ முன்மாதிரியாகி விட்டார்கள். அதுவும் முழுமையாக செயல் முன்மாதிரியாக இருந்தார்கள். அவர்களை முழுமையான அடியாராக அவன் ஆக்கினான்.

நான் ஓதிய வசனத்தில் இவ்விசயத்தின் பக்கமே கவனமூட்டப்பட்டுள்ளது. இன்னும் சொல்வதாயின் கட்டளையிடப்பட்டுள்ளது. ஈமான் கொண்டவராக வாதிக்கக் கூடிய ஒரு முஸ்லிமின் ஈமான் முழுமையாவதற்கும் இறை நெருக்கம் பெறுவதற்கும் எனது ரஸுலின் முன்மாதிரியின்படி அவர் செயல்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதுவன்றி ஈமான் முழுமை பெறாது.

இந்த முன்மாதிரியின்படி செயல்படாமல் மறுமையின் நிஃமத்துகளை எதிர்பார்ப்பது வீணானதாகும். இந்த முன்மாதிரியின்படி நடக்காமல் நன்மையை, நன்மை என்று கூற முடியாது. இந்த முன்மாதிரியின்படி நடக்காமல் அல்லாஹ்வுக்கு செய்யும் இபாதத் உண்மையான இபாதத் ஆகாது. இந்த முன்மாதிரியின்படி செயல்படாமல் அல்லாஹ்வின் நினைவு, சிந்தனை ஆகியவை அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத்தரும் தகுதியைப் பெறாது. அந்த முன்மாதிரியின்படி நடக்காமல் பாவங்களிலிருந்து ஈடேற்றம் பெறுவது சாத்தியமில்லை. இந்த முன்மாதிரியின்படி நடக்காமல் அல்லாஹ்விடம் நீங்கள் வேண்டுகிற ரஹீமிய்யத்திலிருந்து பங்குபெற முடியாது. இந்த முன்மாதிரியின்படி நடக்காமல் அல்லாஹ்வின் முஹப்பத்தை பெறுபவராக முடியாது. ஏனெனில் இறைவனது மிகவும் அன்பிற்குரிய அடியாரைப் பின்பற்றாமல் அல்லாஹ்வின் முஹப்பத்தும் கிடைக்காது.

எனவே நான் கூறியதுபோன்று நாம் முஸ்லிமாக இருப்பது நமது நற்பேறு ஆகும். ஆனால் அவர்களின் உம்மத்தில் இருப்பது, முஸ்லிமாக இருப்பது ஆகிய அருளிலிருந்து பயனடைய நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடியொற்றி நடக்க முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு செய்து காட்டியபடி அந்த அமல்களை செய்வதை நம்மீது நாம் கடமையாக்கிக் கொள்ள வேண்டும். அல் இமாமு ஜின்னத்துன் – இமாம் ஒரு கேடயம் ஆவார் என்று கூறி, இந்த வசனத்தை நினைவூட்டியுள்ளார்கள். எனது முன்மாதிரிதான் உங்களை ஷய்த்தானை விட்டு காப்பாற்றி உண்மையான அடியாராக ஆக்க முடியும். உங்கள் முயற்சியினால் அல்ல. எனது கேடயத்தின் பின்னால் இருங்கள். ஷய்த்தானிடமிருந்து தப்பித்திருங்கள். இபாதத்தைப் பொறுத்தவரையில் நான் செய்யாத ஒரு அமலை செய்து இபாதத்தின் கடமையை நிறைவேற்றவே முடியாது அல்லது அல்லாஹ்வின் நேசத்தை பெறவும் முடியாது.

இக்காலத்தில் நம் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பேருபகாரமாவது, அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான பேரன்பர் ஆவார்கள். அவர்கள் நமது நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான முன்மாதிரியைப் புரியவும், அதன்படி அமல் செய்யவும் வழிகாட்டல் வழங்கினார்கள். இபாதத்திற்காக புதிய புதிய திக்ர்கள், இதற்கென கூட்டங்கள் நடத்துவது போன்ற பித்அத்துகள் நடைமுறையில் வந்து விட்டன. இவையெல்லாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியிலிருந்து நிரூபணமாகவில்லை. எனவே இவை ஒருபோதும் இறைவனின் நெருக்கத்தை பெற்றுத் தர முடியாது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.

எனவே நெருக்கம் பெறுவதற்கு முன்மாதிரியின்படி நடப்பது அவசியமாகும். இப்போது நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது செயல் முன்மாதிரியின் சில உதாரணங்களை எடுத்து வைப்பேன். அது நம்மைப் பொருத்தவரை வழிகாட்டியாகும். அவற்றை செய்வதால் நாம் அல்லாஹ்வின் உண்மையான அடியாராக ஆக முடியும். அவனது நேசத்தை பெற முடியும். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் பற்றி விளக்கியுள்ள சில விசயங்களையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பார்வையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது அந்தஸ்தாக நமக்கு முன்னால் அன்னார் எடுத்து வைத்தது ஆகியவற்றை நான் முதலில் கூறுவேன்.

**ஸய்யதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

*நீர் கூறுவீராக: தம் மீதே அநீதியிழைத்துக் கொண்ட எனது அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் ரஹ்மத்தின் மீது நம்பிக்கை இழந்து விடாதீர்கள். இறைவன் எல்லா பாவங்களையும் மன்னிப்பான். (39:54)*

கூறுகின்றார்கள்: இந்த வசனத்தில் *குல்யா இபாதில்லாஹ்* – நீர் கூறுவீராக! அல்லாஹ்வின் அடியார்களே! என்று கூறுவதற்குப் பதில் *குல்யா இபாதி* – கூறுவீராக! எனது அடியார்களே! என்று கூறுவதன் இரகசியமாவது, இறைவனது எண்ணற்ற அருள்களின் நற்செய்தியை வழங்குவதற்காக இந்த வசனம் இறங்கியது. பாவ மிகுதியினால் உள்ளமுடைந்து போயிருப்பவர்களுக்கு ஆறுதல் வழங்குவதும் இந்த வசனம் இறங்கியதன் நோக்கமாகும். இறைவன் தனது ரஹ்மத்திற்கு ஒரு முன்மாதிரியை எடுத்து வைக்க விரும்பினான். நான் என் மீது பற்று, விசுவாசமுள்ள அடியாருக்கு சிறப்பான வெகுமதிகளை வழங்கி சிறப்பிக்கிறேன் என்று காட்ட விரும்பினான். பாவ மிகுதியினால் அவநம்பிக்கை கொண்டவர்களிடம்

இறைவனுடைய ரஹ்மத் எவ்வளவு பரந்தது என்றும் இறைவன் எவ்வாறு அருள்பாலிக்கின்றான் என்றும் கூற விரும்பினான்.

கூறுகின்றார்கள்: எனவே அவன் குல்யா இபாதி என்ற சொல்லைப் பயன்படுத்தி, இதனை வெளிப்படுத்தியுள்ளான். பாருங்கள்! எனது அன்பிற்குரிய ரஸூல், எனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார் முழுமையான கட்டுப்படுதலில் எத்தனை பெரிய தகுதியை அடைந்துள்ளார்! இப்போது என்னிடமுள்ள அனைத்தும் அவருக்குரியதாகும். எவர் ஈடேற்றத்தை விரும்புகிறாரோ அவர் அந்த நபியின் அடியார் ஆகி விடட்டும். அவருக்கு கட்டுப்படுவதில் ஓர் அடிமையைப் போன்று ஆகிவிட வேண்டும். அப்போது அவர் முன்னர் எவ்வளவுதான் பாவம் புரிந்தவராக இருப்பினும் மன்னிக்கப்படுவார்.

கூறுகின்றார்கள்: அறிந்து கொள்ளுங்கள்! அப்து என்ற சொல் அரபி மொழியில் அடிமை என்ற பொருளிலும் கூறப்படுகிறது. அல்லாஹ் கூறுகின்றான்: வல் அப்து மூஃமினன் கைருமின் முஷ்ரிகீன் (2:222).

எனவே இந்த வசனத்தில் கூறப்பட்டிருப்பதாவது ஈடேற்றத்தை விரும்புகிற மனிதன் இந்த நபியுடன் ஓர் அடிமைக்குரிய தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அதாவது அவரது கட்டளையை விட்டு வெளியில் செல்லக் கூடாது. ஓர் அடிமை தனது கடமையை உணர்வது போன்று எப்போதும் அவர்களின் வழி நடப்பதை தன் மீது கடமையாகும் என்பதை அறிய வேண்டும். அதாவது ஓர் அடிமை தனது எஜமானனிடம் எவ்வாறு கட்டுப்பட்டு நடக்கிறாரோ அதுபோன்று அந்த நபிக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அப்போதுதான் அவர் ஈடேற்றம் பெறுவார்.

கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்த அந்தஸ்த்தின் மீது வழிகெட்டவர்கள் கூறுவது கண்டு பரிதாபம் தான் ஏற்படுகிறது. இதுபோன்ற பெயர்கள் வைக்கக் கூடாது என்று கூறுகின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது எந்த அளவுக்கு அவர்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ளனர் எனில், அவர்களின் பார்வையில் குலாம் நபி, குலாம் ரஸூல், குலாம் முஸ்தஃபா, குலாம் அஹ்மது, குலாம் முஹம்மது ஆகிய பெயர்கள் ஷிர்க் ஆன பெயர்களாகும் என்று கூறுகின்றனர்.

கூறுகின்றார்கள்: இந்த வசனத்திலிருந்து தெரிய வருவது, ஈடேற்றத்தின் இரகசியம் இந்தப் பெயர்களேயாகும். அதாவது, ஒருவர் இந்தப் பெயர்களை முன்னிறுத்தி அந்தப் பண்புகளைத் தாங்கியவராக தன்னை ஆக்கினார் எனில், அவருக்கு ஈடேற்றமும் கிடைக்கிறது. அதுவன்றி பெயர் வைப்பதனால் மட்டும் ஈடேற்றம் கிடைத்து விடும் என்பதன்று. பெயரை வைத்து விட்டோம். இனி நாம் விரும்பிய படி தீமைகளை செய்து கொண்டிருக்கலாம். மனிதன் ஈடேற்றம் பெற்று விடுவான் என்பதன்று. இந்த வரியையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்தவொரு கட்டளையிலிருந்தும் வெளியில் செல்லமாட்டார். குறிப்பாக இந்த வரி மிக மிக அவசியமாகும். ஏனெனில் அப்து என்ற கருத்தில் அதுவும் அடங்கும். அதாவது அம்மனிதன் எல்லா வகையான சுதந்திரம் மற்றும் தான்தோன்றித் தனத்திலிருந்தும் வெளிவர வேண்டும்.

அப்தியத் (அடிமைத்தனம்) எப்போது ஏற்படும் எனில், அம்மனிதன் சுதந்திரமானவனாகவும் இருக்க முடியாது. தன் விசயத்தில், தான் விரும்பிய முடிவை எடுக்கவும் முடியாது. இதிலிருந்து வெளியில் வர வேண்டும். தனது எஜமானரை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். எனவே உண்மையின் வேட்கை உள்ளவருக்கு இந்த ஆர்வம் வழங்கப்பட்டுள்ளது. எவர் ஈடேற்றத்தை விரும்புகிறாரோ அவர் தன்னிடம் இந்த கருத்தை கொண்டுவர வேண்டும். உண்மையில் இந்த வசனம் இரண்டாவது வசனமாகிய குல் *இன்தும் துஹிப்பூனல்லாஹ ஃபத்தபிவூனி யுஹி பிப்குமுல்லாஹ் வயக்ஃபிர்லகும் ஸுனூபகும் (3:32)* என்ற வசனத்தின் கருத்துடன் ஒத்துள்ளது. இரண்டிற்கும் ஒரே பொருள் தான். ஏனெனில் முழுமையான கட்டுப்படுதலுக்கு முழுமையான பின்பற்றுதல் அவசியமாகும். அதாவது ஒருவரை முழுமையாகப் பின்பற்றுவதற்கு அவருக்கு கீழ்படிவதன் உச்சநிலையை அடைவது அவசியமாகும். மேலும் கட்டுப்படுதல் இருந்தால் தான் பின்பற்றவும் முடியும்.

கூறினார்கள்: முழு வாசகம் இதுவாகும். முழுமையாகப் பின்பற்றுதல் என்பது தன்னை மாய்த்து விடுகிற முழுமையான கட்டுப்படுதலுடன் தொடர்புடையதாகும். இதுவே முதல் வசனத்திலுள்ள மன்னிப்பு வழங்குவதாகக் கூறியுள்ள வாக்குறுதியின் இரகசியமாகும். இன்னும் சொல்வதாயின், இறை நேசம் கிடைக்கும் என்ற நற்செய்தியும் ஆகும். குல் யா இபாதி என்ற இந்த வசனத்தை மற்றொரு வகையில் கூறுவதாயின், *குல் யா முத்தபயீ* – என்னைப் பின்பற்றுபவர்களே! நீங்கள் பாவ மிகுதியால் பீடிக்கப்பட்டுள்ளதாகக் கருதி இறை கருணை மீது அவநம்பிக்கை அடைந்து விடாதீர்கள். என்னைப் பின்பற்றுவதன் பரக்கத்தால் அல்லாஹ் உங்களது எல்லா பாவங்களையும் மன்னித்து விடுவான் என்று பொருள்படும்.

இந்த அப்து என்ற சொல்லுக்கு வெறுமனே அல்லாஹ்வின் அடியார்கள் என்று பொருள் கொண்டால், பொருள் பேதம் ஏற்படும். ஏனெனில் இறைவன் எந்த நியாயமுமின்றி ஈமானின் நிபந்தனையும், பின்பற்றுதல் என்ற நிபந்தனையும் பூர்த்தி ஆகாத நிலையிலும், எல்லா காஃபிர்களையும் முஷ்ரிக்குகளையும் அப்படியே மன்னித்து விடுவான் என்றாகி விடும். அதாவது ஈமானிலும் முழுமை பெறவில்லை. பின்பற்றுதல் வழிநடத்தலில் முழுமை பெறவில்லை எனில் மன்னிக்கப்பட முடியாது. முஷ்ரிக்குகளையும் காஃபிர்களையும் அப்படியே மன்னித்து விடுவான் எனறு பொருளாகி விடும். அத்தகைய பொருள் தெளிவான திருக்குர்ஆனின் வசனங்களுக்கு நேர் மாற்றமானதாகும். எனவே இந்த நற்செய்தி எவர் முழுமையாக கட்டுப்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுகிறாரோ அவருக்குரியதாகும். முழுமையாகப் பின்பற்றுதால் கடுமையான பாவங்கள் கூட அழிந்து விடுகிறது.

முன்மாதிரியின் சில உதாரணங்களை எடுத்து வைப்பேன். ரமலானில் இறைவன் ஒரு ஆன்மீக சூழ்நிலையை உருவாக்கியுள்ளான். ஒவ்வொரு வருடமும் ரமலான் வரும்போது நன்மைக்கான இந்த சூழல் உருவாகிறது. நன்மைகள், இபாதத்துகள் செய்வதற்கு கவனம் ஏற்படுகிறது. இப்போதும் ஏற்பட்டுள்ளது. உண்மையில் இறைவனது உண்மையான அப்து ஆக வேண்டும் என்றால், பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றுவதை தொடர்வது அவசியமாகும். ஒருமுறை அமல்படுத்தி விட்டோம் என்பதன்று. அன்னாரின் அமல் மற்றும் முன்மாதிரி ஏதோ ஒரு விசயம் பற்றி மட்டுமல்ல அல்லது ரமலானுக்கு மட்டுமே குறிப்பாக உரியதும் அன்று. மாறாக, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களது கூற்றின்படி கான குலுகுஹுல் குர்ஆன் என்பதாகும். திருக்குர்ஆன் அவர்களது முழு வாழ்க்கை மீது வியாபித்திருந்தது. அன்னாரின் குலுக் – நல்லொழுக்கம் மகத்தான குர்ஆன் ஆக இருந்தது.

**ஆகவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

பாவ மிகுதியால் நொந்து போனவர்களுக்கு நம்பிக்கையின் ஒளி தென்படுகிறது. அவர்கள் அந்நிலையிலும் கூட இந்த முன்மாதிரியைப் பின்பற்றி வருவதற்கு உறுதியான எண்ணம் கொள்ள வேண்டும். அது வெறும் விருப்பமாக அன்றி, அத்துடன் அமலும் இருக்க வேண்டும். பிறகு அதனை முறைப்படி கடைபிடித்தும் வர வேண்டும். அதாவது இந்த வசனத்தின் சுருக்கம் இவ்வாறு அமையும் அல்லது இந்த வசனத்தின் அசல் நோக்கம் இவ்வாறு அமையும்.

எவர் முழு மனதுடன் உனது அல்லது அல்லாஹ்வின் தூதரின் அடிமை ஆகி விடுவாரோ அவருக்கு ஈமானின் ஒளி, அன்பு, பிரியம் வழங்கப்படும். அவை அம்மனிதனை அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து விடுவித்து விடும். மேலும் அம்மனிதர் பாவங்களிலிருந்து ஈடேற்றம் அடைவார். இதே உலகில் அவருக்கு ஒரு தூய வாழ்வு வழங்கப்படும். மன இச்சைகள் என்ற குறுகலான மற்றும் இருள் நிறைந்த கல்லறையிலிருந்து அவர் வெளியேற்றப்படுவர்.

ரமலானின் நோக்கம் இறைவனது திருப்தியை வேண்டுதல், அவனுக்கு இபாதத் செய்தல் ஆகியவையாகும். இதுவே அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து விடுதலை பெறுவதாகும். இதனை முழுமைப்படுத்துவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது அவசியமாகும்.

கூறினார்கள்: இந்த உலகிலேயே அவருக்கு ஒரு தூய வாழ்வு வழங்கப்படும். குறுகலான மன உணர்ச்சிகள் என்னும் கல்லறைகளிலிருந்து வெளியேற்றப்படுவார். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர் இதனை பெறுவார். இதனை குறித்தே ஒரு ஹதீஸ் சுட்டிக் காட்டுகிறது.

*அனல் ஹாஷிருல்லஸி யுஹ்ஷருன்னாயி அலா கதமி*. அதாவது, காலடிகளின் கீழிருந்து மரணித்த மக்கள் எழுப்பப்படுவார்களோ, அந்த எழுப்புபவன் நான் ஆவேன். கால்களிலிருந்து எழுப்பப்படுபவர்கள் என்பது பின்பற்றுபவர்கள், என்னை அடியொற்றி நடப்பவர்கள் என்று பொருள்.

கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் ஒரு மரபுத்தொடர் நிறைந்து காணப்படுகிறது. உலகம் இறந்து விட்டது. இறைவன் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களை அனுப்பி மீண்டும் புதிதாக உலகை உயிர்ப்பித்தான்.

இவ்வாறு வருகிறது. *இஃலமு அன்னல்லாஹ யுஹ்யில் அர்ள பஅத மவ்திஹா (57:18)* அதாவது இந்த விசயத்தைக் கேளுங்கள். பூமியை, அது இறந்த பிறகு இறைவன் உயிர்ப்பிக்கிறான் என்று அறிந்து கொள்ளுங்கள். பிறகு இதற்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் (ரலியல்லாஹு அன்ஹும்) பற்றி கூறுகிறான்.

*வஅய்யதஹும் பி ரூஹின் மின்ஹும் (58:23)* அதாவது ரூஹுல் குத்ஸ் -ஐ கொண்டு அவர்களுக்கு உதவி செய்தான். ரூஹுல் குத்ஸின் உதவி என்பது உள்ளங்களை உயிர்ப்பித்து ஆன்மீக மரணத்திலிருந்து தப்பிப்பது, தூய ஆற்றல்கள், தூய புலன் உணர்வுகள், தூய அறிவு ஆகியவை வழங்கப்படுதல் மற்றும் நிச்சய உறுதி தரும் அறிவுகள் தெள்ளத்தெளிவான சான்றுகள் ஆகியவற்றை வழங்கி இறைவனுக்கு அருகில் கொண்டு சென்று விடுகிறான்.

ஆன்மீக மரணத்திலிருந்து தப்பித்தல் என்றால் என்ன? உலக ஆசைகளை தியாகம் செய்வதற்குப் பெயராகும். தனது நஃப்ஸை தியாகம் செய்வதற்கு பெயராகும். இதன் பக்கம் அல்லாஹ் திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளான். இது அல்லாஹ்வின் திருப்திக்கு முதன்மை வழங்குவதற்கு பெயராகும். சஹாபா ரிளுவானுல்லாஹி அலைஹிம் இவை அனைத்தையும் செய்தார்கள். அல்லாஹ் அவர்களது உள்ளத்திற்கு ஆன்மீக வாழ்வு வழங்கினான். அவர்களுக்கு தூய ஆற்றல்களை வழங்கினான். அதன் மூலம் அவர்கள் ஷய்த்தானை எதிர்த்தார்கள். அவர்களின் சிந்தனையை தூய்மையாக்கினான். அவர்களுக்கு திருக்குர்ஆனின் இல்மை வழங்கினான். அவர்களை அறிவு மற்றும் உறுதியின் இறுதி எல்லை வரை கொண்டு சேர்த்தான். அல்லாஹ்வின் இருப்பின் மீது அவர்களுக்கு அய்னுல் யகீன் என்ற பார்வை ஞானத்தின் உறுதி ஏற்பட்டது. இறை குத்ரத்தின் காட்சியை அவர்கள் நேரடியாகக் கண்டனர். அதுவே அவர்களுக்கு இறை நெருக்கத்தை வழங்கியது. இவை அனைத்து அவர்களுக்கு அவர்களது எஜமானரும், வழிகாட்டியுமாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் காரணத்தால் கிடைத்தது. அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையாகிய *வல்லஸீன ஜாஹதூ ஃபீனா லனஹ்தியன்னஹும் சுபுலனா (29:70)*. எவர்கள் நம்மை அடைய முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்கு நம்மை அடையும் வழியைக் காட்டுகிறோம் என்பதை மேலும் புரிந்து கொள்ளும் திறன் உருவாகியது. இவையனைத்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின்படி செல்லும் முயற்சியால் விளைந்தது.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஈடேற்றத்தின் பல்வேறு தகுதிகளாகிய அறிவின் கிளைகள் என்பது நிச்சய உறுதி என்ற முறையில் ரூஹுல் குத்ஸ் மூலமாக கிடைக்கிற வாழ்வு கிடைக்காமல் பெறவே முடியாது.

ஆன்மீக வாழ்வு என்பது இந்த ரஸூலைப் பின்பற்றுவதனால் மட்டுமே கிடைக்கிறது என்று திருக்குர்ஆன் மிகவும் அழுத்தமாக இதனை வாதிடுகிறது. அதாவது, ஆன்மீக மரணத்திலிருந்து காப்பாற்றுகிற, தூய வாழ்வு வழங்குகிற தூய புலனுணர்வுகளை வழங்குகிறது. தூய அறிவு வழங்குகிற அந்த இல்ம்கள் எல்லாம் ஈடேற்றத்திற்கு காரணமாக இருப்பவையாகும். இந்த இல்ம்கள் மனிதன் சுயமே முயன்று தமது வாழ்வில் பெற்று விடத்தக்கதல்ல. மாறாக இவை மனிதனுக்கு ரூஹுல் குத்ஸ் மூலமாகவே கிடைக்கிறது.

அதனை திருக்குர்ஆன் ஆழமாக வாதிடுகின்றது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

அதாவது ஆன்மீக வாழ்வு என்பது இந்த ரஸூலைப் பின்பற்றாமல் கிடைக்காது. இது ஆன்மீக வாழ்வாகும். பௌதீக வாழ்வு அல்ல. எனவே இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதால் கிடைக்கிறது. இந்த நபியைப் பின்பற்றுவதற்கு மறுக்கிற மக்கள் அனைவரும் இறந்தவர்கள் ஆவர். அவர்களிடம் ஆன்மீக வாழ்விற்கான ரூஹ் இல்லை.

கூறுகின்றார்கள்: ஆன்மிக வாழ்வு என்பதன் பொருள், ரூஹுல் குத்ஸின் உதவியால் உயிர் பெறுகிற மனிதனது அறிவு மற்றும் செயல் ஆற்றல்களாகும். திருக்குர்ஆனிலிருந்து நிரூபிக்கப்பட்ட விசயமாவது,அல்லாஹ் நிலைநாட்ட விரும்புகிற கட்டளைகள் 600 ஆகும். அதுபோன்று ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களது இறக்கைகளும் 600 ஆகும். மனிதப் பிறப்பு அந்த 600 கட்டளைகளையும் பின்பற்றியவாறு ஜிப்ரீலின் இறக்கைகளின் கீழ் வராத வரை அவரிடம் ஃபனாபில்லாஹ் – அல்லாஹ்விடம் மாய்ந்து விடுதல் என்ற குழந்தை பிறக்காது. அதாவது கரு முட்டை, மனிதப் பிறப்பிற்கு உதாரணமாக கூறப்பட்டுள்ளது. மனிதன் 600 கட்டளைகளை தன் மீது ஏற்றுக் கொள்ளாத வரை ஃபனாபில்லாஹ் ஆக முடியாது. அல்லாஹ்வின் அருகில் கொண்டு போகிற அக்குழந்தை உருவாகவே முடியாது. இந்த 600 கட்டளைகளும் மனிதனுக்குள் 600 கருமுட்டையின் சக்தியைக் கொண்டுள்ளன. அதாவது இதனை பெறும் சக்தி மனிதனிடம் வைக்கப்பட்டுள்ளது. இது மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல.

கூறுகின்றார்கள்: ஜிப்ரீலின் 600 இறக்கைகளின் கீழ் ஒரு மனிதன் தனது 600 கருமுட்டைகளையும் கொண்டு வந்து விட்டால் அவன் முழுமை பெற்ற மனிதனும் அவனது பிறப்பு முழுமையானதும், அவன் ஆன்மீக வாழ்வைப் பெற்றவனும் ஆவான். இவை கிடைத்து விட்டால் அவனுக்கு உண்மையான ஆன்மீக பிறப்பும் கிடைத்து விடுகிறது. உண்மையான ஆன்மீக வாழ்வும் கிடைத்து விடுகிறது. எனவே இந்த 600 கட்டளைகளையும் தன்னிடம் கொண்டு வர முயற்சி செய்யுங்கள்.

கூறுகின்றார்கள்: ஆய்வுக் கண்ணுடன் பார்க்கும் போது தெரிய வருவதாவது, மனிதப் பிறப்பின் ஆன்மீகக் குழந்தை ரூஹுல் குத்ஸின் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலின் பரக்கத்தாலேயே கிடைக்கிறது. அதன் அறிவு, தரம், வடிவம், நிலை எல்லாவற்றிலும் அக்குழந்தை பிற எல்லா நபிமார்களின் குழந்தைகளை விட முழுமையும் நிறைவும் வாய்ந்தது. அதாவது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால் உருவாகிற ஆன்மீகக் குழந்தை அதாவது மனிதனிடம் காணப்படுகின்ற பண்புகள் அதன் அளவிலும், தரத்திலும், வடிவத்திலும் எல்லா நிலையிலும் மற்ற நபிமார்கள் மூலமாக ஏற்பட்ட ஆன்மீக புரட்சியை விட மிகவும் பெரியதாகும்.

அதன் பக்கம் சுட்டிக் காட்டியவாறு தான் இறைவன் கூறுகிறான்: ***குன்த்தும் கைர உம்மத்தின் உக்ரிஜத் லின்னாஸ் (3:111)*** அதாவது நீங்கள் எல்லா உம்மத்துகளையும் விட சிறந்தவர்கள். நீங்கள் மக்களை சீர்திருத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளீர்கள்.

கைர உம்மத் ஆக்கப்பட்டுள்ளோம் என்பதனை நமது பெரும்பாலான சொற்பொழிவுகளில் கேட்கிறோம். இந்த கைர உம்மத் ஆவதற்கு அவசியமாவது நமக்குள் எல்லா ஆன்மீகப் புரட்சியையும் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். நமக்கு போதிக்கப்பட்ட எல்லா ஆன்மீக நிலைமைகளையும் நம்மிடம் கொண்டு வர வேண்டும். திருக்குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் கூறப்பட்ட அந்த நிலைமைகளை நம்மிடம் கொண்டு வர வேண்டும். நம்மிடம் இவ்வாறு சீர்திருத்தம் ஏற்படும்போது இந்த தகுதியை மனிதன் அடையும் போது பிறகு தான் மற்றவரை சீர்திருத்தும் வேலையை செய்ய முடியும். பிறகு தான் அது பலன் அளிக்கும். இந்த ரஸூலின் முன்மாதிரியின்படி செயல்பட நாம் முயற்சி செய்யும் போது நமது வாழ்வை அதற்கேற்ப அமைக்கும் போது, அதற்காக நாம் எப்போதும் ஆய்வு செய்து வரும் போது, நமது ஆன்மீக முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்கும் போது, அதற்கு முயற்சி செய்யும் போது, எந்த விசயங்களில் எங்கு எந்த அளவுக்கு நாம் திருக்குர்ஆனின் கட்டளைகளை ஏற்று நடக்க முயலுவோமோ அந்த அளவுக்கு நாம் உலகில் புரட்சியை ஏற்படுத்துவோம். அப்போதுதான் இஸ்லாத்தின் உண்மையான தூதை உலகிற்கு கொண்டு சேர்க்க

முடியும். எனவே, நிச்சயமாக ஒரு பாவி கூட இறைவனது அப்து – அடிமை ஆக முடியும். அவரது எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட முடியும். ஆனால் ரஸூலின் முன்மாதிரியைக் கொண்டு செயல்பட முயற்சி செய்யும் போதுதான் அது சாத்தியமாகும். நமது எல்லா சக்தியுடனும் அதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இப்போது நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது வாழ்விற்கு பல்வேறு கோணங்கள் உள்ளன. அவர்களின் முன்மாதிரி உள்ளது. அதனைப் பின்பற்றுமாறு இறைவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான். எந்த அளவுக்கு எவ்வாறு அதனை பெற முடியும் என்பது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் விளக்கியுள்ளார்கள். அந்த முன்மாதிரியின்படி செயல்படுவதன் மூலம் நமக்கு அல்லாஹ்வின் அன்பும் கிடைக்கிறது. அதனால் அடியான் அன்பிற்குரிய இறைவனின் மடியில் வந்து விடுகிறான். எல்லாவற்றிற்கும் முதலில் இபாதத், நன்றியுடைமை ஆகியவற்றில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்ன முன்மாதிரி காட்டியுள்ளார்கள் என்று பார்ப்போம். அந்த மகத்தான நபி, ஒவ்வொரு நாளும் ஆட்சி விவகாரங்கள், தம்மை ஏற்றுக் கொண்டுள்ளவர்களை சீர்திருத்துதல், தர்பிய்யத் வழங்குதல் அவர்களின் ஆன்மீக முன்னேற்றம் காட்டும் பணிகளில் மூழ்கியிருந்தார்கள். சாதாரண நாள்களிலும் கடும் பணிகள் இருந்தன. யுத்தங்களிலும், திடீரென ஏற்படும் நிகழ்வுகளிலும் அன்றாட பணிகளுடன் உடலளவிலும் கடும் உழைப்பு அவர்களுக்கு இருந்தது. இருந்தும் கூட அவர்களின் பகல் பொழுதின் இபாதத்துகளிலும் எந்தக் குறையும் தென்படவில்லை. இரவு இபாதத்துகளிலும் தென்படவில்லை. இரவில் இபாதத்திற்காக நின்றால் கால்கள் வீங்கி விடும். காரணம் இரவில் இபாதத் செய்யுமாறு இறைவனது கட்டளை இருந்தது. அவர்களின் இரவுவணக்கம், பாதி இரவும், பாதி இரவுக்கு மேலும் இருந்தது.

அல்லாஹ் கூறுகின்றான்: ***இன்ன நாஷியத்தல் லைலி ஹிய அ-த்து வத்அவ் வஅக்வமு கீலா (73:7)*** இரவில் விழிப்பது நஃப்ஸை கட்டுப்படுத்துவதற்கும் துஆவின் வார்த்தைகள் மூலமாக மிகவும் நற்பலன் அளிப்பதும் ஆகும்.

ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். யாரஸூலல்லாஹ்! தாங்கள் முதலிலேயே இறைவனுக்கு நெருக்கமானவர்கள்தான். நீங்கள் உங்கள் நஃப்ஸுக்கு இவ்வளவு கஷ்டத்தை ஏன் தருகின்றீர்கள்?

கூறினார்கள்: ஆயிஷாவே! நான் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவனாக இருக்கிறேன். அல்லாஹ் என் மீது எவ்வளவு அருள் புரிந்திருக்கிறான். பிறகு அவனுக்கு நன்றியுள்ள அடியானாக இருப்பது என்மீது கடமையில்லையா? உபகாரத்திற்குப் பதிலாக நன்றி செலுத்தப்படுகிறது. எனவே அவர்கள் எப்போதும் இறைவனது அருளையும் கருணையையும் நினைவு கூர்ந்தார்கள். அதற்கு நன்றி செலுத்தினார்கள்.

நம்மீது அல்லாஹ்வின் பெரும் கருணையால் தான், அவன் நம்மை முஸ்லிம் ஆக்கியுள்ளான். அதுமட்டுமின்றி அவர்களின் உண்மையான அடியாருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது ஸலாத்தை கொண்டு சேர்க்கும் நல்வாய்ப்பையும் வழங்கியுள்ளான். இந்தக் கருணை எத்துணை பெரியது எனில், அதற்கு நம்மால் நன்றி செலுத்தவே இயலாது. ஓர் அஹ்மதியால் நன்றி செலுத்தவே முடியாது. நமது முயற்சி எவ்வளவுதான் இருந்தாலும் நம்மால் நன்றி செலுத்த முடியாது. எனவே ஒவ்வோர் அஹ்மதிக்கும் இந்த முயற்சி இருக்க வேண்டும். நாம் நமது சக்திக்கேற்ப அல்லாஹ்வுக்குரிய இபாதத்தை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். ரமலானில் நஃபில் தொழும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இது தற்காலிக பழக்கமாக இருக்கக் கூடாது. நமது உலகியல் நோக்கங்களுக்காக இருக்கக் கூடாது.

மாறாக இறைவனுக்கு நன்றி செலுத்துவதே அதன் பெரும் பகுதியாக இருக்க வேண்டும். பிறகு அந்த இபாதத்தின் தாக்கம் நமது சொல், செயலின் உண்மைத்தன்மையில் வெளிப்பட வேண்டும். நாம் கைர உம்மத்தாகி உலகின் சீர்திருத்தத்திற்காக முயன்றால், நமது பேச்சுக்களிலும் கூட அப்போது தான் தாக்கம் ஏற்படும். நம்மிடம் இந்த நிலை ஏற்படும் போதுதான் நல்ல விளைவுகள் ஏற்படும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் உள்ள நஃபில்களைப் பற்றி கூறப்பட்டது. அவர்கள் எவ்வாறு இரவில் இபாதத் செய்தார்கள் என்று கூறினேன். பர்ள் தொழுகைகளை பேணுவதில் கூட அவர்களிடம் எவ்வளவு கவனம் இருந்தது! கடும் நோயுற்ற நிலையிலும் கூட, வீட்டில் உட்கார்ந்து அல்லது படுத்தும் கூட தொழுவதற்கு அனுமதி இருந்த நிலையிலும் சிலரது

உதவியுடன் மஸ்ஜிது வந்தார்கள். ஆனால் இவையெல்லாம் இருந்தும் கடும் இபாதத்துகளும், சிரமமும் மேற்கொண்டு இபாதத் செய்து வந்தபோதிலும் இபாதத் விசயத்தில் செயற்கையை அவர்கள் விரும்பியதில்லை.

வீட்டில் கயிறு ஒன்று தொங்க விடப்பட்டிருந்தது. காரணம் கேட்ட போது, ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் இபாதத் செய்து செய்து களைப்படைந்து போய் இந்தக் கயிற்றின் உதவியால் நிற்பார்கள் என்று தெரிய வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை விரும்பவில்லை. எவ்வளவு நேரம் மகிழ்ச்சியும் உளப்பூர்வமாகவும் எளிதாக இபாதத் செய்ய முடிகிறதோ அவ்வளவு செய்யுங்கள். களைப்பு வந்துவிட்டால் உட்கார்ந்து விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவன் எவ்வளவு ஆற்றலை வழங்கியிருந்தான் என்றால், கால்கள் வீங்கிய பிறகும் நின்றார்கள். ஆனால் மற்றவர்களுக்கு சலுகை வழங்கினார்கள்.

ஆனால் சிலர் இந்த சலுகையின் காரணமாக உட்கார்ந்து கொண்டே தொழும் வழக்கத்தை வைத்திருக்கிறார்கள். இது அந்த சலுகையல்ல. சிலர் அதிகாலை ஃபஜ்ர் தொழுகைக்கு படுக்கையிலேயே தயமம் செய்து விட்டு அதிலேயே தொழுது விடும் வழக்கத்தை வைத்துள்ளார்கள். இதுவும் தவறாகும். இந்த சலுகையை தவறாகப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் அது இபாதத் அல்ல. உங்கள் சக்தி மற்றும் தகுதியின் அதிகபட்ச நிலை வரை பயன்படுத்துவது அவசியமாகும். ஒவ்வொவருவரும், தமது சக்தியை மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு தான் ஒவ்வொருவரும் நான் உஸ்வயே ஹஸனாவின் படி செல்ல முயற்சி செய்துள்ளேன் என்று கூற முடியும். இபாதத் மற்றும் நன்றி செலுத்துதலின் படித்தரம் எத்தகையது பாருங்கள்! அதனை நம் முன்னால் நிலைநாட்டியுள்ளார்கள். நான் அதனை விளக்கினேன்.

**அத்தனைக்குப் பிறகும் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஒரு மனிதர் தமது அமல்களை வைத்து சொர்க்கம் செல்ல மாட்டார். உடனே ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்களும் கூட உங்கள் அமல்களால் சொர்க்கம் செல்லமாட்டீர்களா? நீங்களோ முழு இரவும் தொழுகைகளில் கழிப்பவர்களாயிற்றே! கால்களும் வீங்கி விடுகின்றன. அத்தகைய ஃபனாவின் நிலை ஏற்படுகிறதே! என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் கூட எனது அமல்களின் மிகுதி கொண்டு ஜன்னத்தில் நுழைந்து விட முடியாது. ஆம்! இறைவனது ஃபள்ள் மற்றும் ரஹ்மத் தான் என்னையும் கூட சொர்க்கத்தில் சேர்க்கும். இது எத்தகைய இறையச்சத்தின் நிலை! சிலர் சிறு சிறு நன்மைகள் மீது பெருமை கொள்கின்றனர். அவர்களுக்கு இது எத்தகைய அஞ்சத்தக்க நிலை!

அல்லாஹ் நம்மை தனது அருளின் போர்வையால் மூடி வைப்பானாக! உண்மையான இபாதத் செய்வதற்கு தவ்ஃபீக் வழங்குவானாக! எளிமையும் பணிவையும் வழங்குவானாக!

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

உங்களின் பணிகளில் நேர்மையை கடைபிடியுங்கள். இறைவனது நெருக்கத்தின் வழியைத் தேடுங்கள். மேலும் கூறினார்கள்: எந்த மனிதரும் மரணத்திற்கு ஆசைப்பட வேண்டாம். ஏனெனில் அவர் நல்லவராக இருந்தால் நன்மையில் வளர்வார். இறை அருளுக்கு வாரிசாவார். அவர் தீயவராக இருந்தால் தவ்பா செய்ய வாய்ப்பு கிடைக்கும். இந்த தவ்பாவின் வாய்ப்பும் கூட இறைவன் வாய்ப்பு வழங்கினால் மட்டுமே கிடைக்கும். அதற்காகவும் துஆ செய்ய வேண்டும். அதுவன்றி உலகில் பெரும்பாலாக தீமையில் பீடிக்கப்பட்டு அதில் முன்னேறிக் கொண்டும் உள்ளனர்.

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூஃமின்களுக்காக கூறினார்கள்.**

சாதாரண தீமைகளைப் பற்றி கூறினார்கள். அந்த பலவீனங்களை அகற்றுவதற்கு தவ்பாவின் மூலமாக அவருக்கு தவ்ஃபீக் கிடைக்கும்.

எனவே ரமலானில் மனிதன் தனது பலவீனங்களை அகற்ற முயற்சி செய்கிறான். எனவே அதற்காக முயற்சி செய்ய வேண்டும். இது தவ்பாவின் பக்கம் கவனம் செலுத்துகிற மக்களுக்காக ஹஸ்ரத் நபி (ஸல்)

அவர்கள் கூறியதாகும். அதில் கவனம் செலுத்தி நன்மையில் முன்னேற அவர்கள் முயலுகின்றனர். மேலும் துஆ செய்கிறார்கள். மரணம் நிர்ணயிக்கப்பட்டது. அந்நேரம் வரும் போது அல்லாஹ்வே! நீ என் மீது திருப்தி கொண்டவனாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தமது திறமைகளை சரியான முறையில் பயன்படுத்தாமல் இருப்பதுகூட தவறாகும். திறமைகளைச் சரியாகப் பயன்படுத்துவது இபாதத்துகளில் ஒன்றாகும். அல்லாஹ் நமக்கு தந்துள்ள உறுப்புகளான காது, கண், நாக்கு, கை, கால் போன்றவற்றைக் கொண்டு நற்காரியங்களை செய்வதும் இபாதத் ஆகும். காதுகளால் நல்ல விசயங்களைக் கேட்டல் கூட அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவராக்குகிறது. ஆனால் மக்களின் புறம் பேசுதல், கோல் மூட்டுதல் ஆகியவற்றை கேட்பது பாவமாகும். அதைப் போன்று ஒருவர் தனது காதை தீய விசயங்களைக் கேட்கவே கூடாது என்ற எண்ணத்தில் அடைத்து வைத்தால் அதுவும் கூட சரியானது அல்ல. மாறாக அதுவும் ஒருவகையான பாவமாகும். அதுபோன்று கண், காது, கை பிற உறுப்புகள் போன்றவற்றின் நிலையும் இதுதான்.

தற்போது நாம் ரமலானில் சென்று கொண்டிருக்கிறோம். ஸஹர் உண்ணுங்கள். இப்தார் உண்ணுங்கள் என்பதும் இறை கட்டளையாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது அமலினால் செய்து காட்டினார்கள். ஒருவர் அல்லாஹ்வின் கட்டளையின் படி செல்லா விட்டால் அதுவும் தவறாகும்; பாவமாகும். நிர்பந்தம் ஏற்பட்டால் ஒழிய. சிலருக்கு நிர்பந்தமாக ஸஹர் சாப்பிட நேரம் கிடைக்கவில்லை; உண்ண முடியவில்லை எனில் குற்றமில்லை. சிலருக்கு ஆரோக்கியம் இருந்தும் நோன்பு வைப்பதில்லை எனில் அதுவும் பாவமாகும்.

இறைவனது நிஃமத்கள் நமக்கு எந்த வழியில் கிடைத்தாலும் இறைவனது கட்டளையிலிருந்து பயன்பெறுவது அனுமதிக்கப்பட்ட முறையில் பயன் அடைவது நன்மையாகி விடுகிறது. தவறாகப் பயன்படுத்துவது பாவமாகும். இதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தான் அமலில் செய்து காட்டினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது சகிப்புத்தன்மை அதன் எல்லையை தொட்டிருந்தது. மது தடுக்கப்படுவதற்கு முன் ஒரு சஹாபி போதையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சற்று அதிகமாக பேசி விட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அன்னாருக்கு இறைவன் ஆட்சியை வழங்கினான். மதீனா வந்தார்கள். அரசு நிலைநாட்டப்பட்டது. அந்நிலையிலும் கூட அவர்களின் சகிப்புத்தன்மையில் ஒப்பற்ற முன்மாதிரி நமக்கு கிடைக்கிறது. உலகில் ஒருவரிடம் 4 காசு வந்து விட்டால், ஒரு பொறுப்பு கிடைத்து விட்டால் மூக்கின் மீது ஒரு கொசுவைக் கூட உட்கார விடமாட்டார். தமது எதிராக யாராவது பேசிவிட்டால் கோபமடைந்து விடுகிறார். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறை எவ்வாறிருந்தது? ஒருமுறை ஒரு யஹூதி வந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வாக்குவாதம் செய்தார். பேச்சுக்கிடையில் மீண்டும் மீண்டும் முஹம்மதே! முஹம்மதே! என்று விளித்து உரையாடினார். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை முஹம்மது என்றே அழைத்தார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவின் மன்னராக இருந்தார்கள். சுற்றுப்புறத்தில் வெகுதூரம் வரை அவர்களின் ஆட்சி பரவியும் இருந்தது. சஹாபாக்களுக்கு யஹூதியின் இந்த பேச்சுமுறை பிடிக்கவில்லை. ஏனெனில் சஹாபாக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை யாரஸூலல்லாஹ் என்றே அழைத்தனர். முஸ்லிம் அல்லாதவர்கள் அன்னாரது சுட்டுப் பெயராகிய அபுல் காஸிம் என்ற பெயரை கூறி அழைப்பர். யஹூதி இவ்வாறு மீண்டும் மீண்டும் முஹம்மதே! முஹம்மதே! என்று கூறியதும் சஹாபாக்கள் கோபத்துடன் இடைமறித்தனர். நீர் ரஸூலுல்லாஹ் என்று கூற முடியாவிட்டாலும் அவர்களது குன்யத் பெயரான அபுல் காஸிம் என்று கூறி அழையும்! அந்த யஹூதி கூறினார். அவரது தாய் தந்தையர் அவருக்கு வைத்த பெயரைக் கூறி தான் அழைப்பேன்!

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புன்முறுவல் பூத்தவாறு கூறினார்கள்: அவர் சரியாகத்தான் கூறுகிறார்கள். எனது பெற்றோர் எனக்கு முஹம்மது என்று தானே பெயர் வைத்தார்கள். அப்படியே அவர் அழைக்கட்டும்! விடுங்கள். கோபம் கொள்ளாதீர்கள்!

சில வேளைகளில் இவ்வாறும் நடந்தது. மக்கள் அன்னாரின் கரத்தைப் பற்றிக் கொண்டு நிற்பார்கள். அதனால் அவர்களது அவசியமான பணிகளும் கூட தடைபட்டன. அவர்களின் நேரமும் வீணாகும். அப்போது பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் அவர்கள் கூறுவதைக் கேட்டு அவர்களின் தேவைகளை நிறைவு செய்வார்கள். அவர்களது நேர்மையின் தரம் எத்தகையதாக இருந்தது என்றால், ஒருவர் குற்றம் செய்தால் அவர் ஏழையா? பணக்காரரா? என்று பார்ப்பதில்லை. பெரிய குடும்பத்தைச் சார்ந்தவரா? சாதாரண மனிதரா? என்று பார்ப்பதில்லை. ஒரு பணக்காரப் பெண், ஒருவருடைய பணத்தை திருட முயன்றார். பிடிபட்டதும் தண்டனை தரப்பட்டது. கோத்திரத்தாரிடையே பெரும் நிம்மதியின்மை ஏற்பட்டது. குறிப்பாக அவர்களது உறவினர்களிடம் ஏற்பட்டது. அப்பெண் பெரிய குடும்பத்தைச் சார்ந்தவள். அவளுக்கு ஏன் தண்டனை தரப்பட்டது? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பரிந்துரைப்பதற்காக, இப்பெண்ணின் குற்றத்தை மன்னித்து விட வேண்டும் என்பதற்காக உஸாமா அனுப்பப்பட்டார். அன்னார் அதனைக் கேட்டதும் சினமுற்றார்கள். மிகவும் மென்மை வாய்ந்த, மன்னிக்கக்கூடிய, இனிமையாக உரையாடக்கூடிய, ஒருபோதும் கோபப்படாத ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் கோபம் கொண்டார்கள். இறை கட்டளைக்கு எதிரில் பரிந்துரை செய்வதற்காக என்னிடம் வந்துள்ளீரா? என்றார்கள். முந்தைய சமுதாயங்கள் இவ்வாறு தான் அழிந்தன. பெரிய ஆட்களுக்கு சலுகை வழங்கினர். சிறியவர்களுக்கு அநீதி இழைத்தனர். இஸ்லாம் அதற்கு அனுமதி தரவில்லை. இறைவன் மீது ஆணையாக! எனது மகள் ஃபாத்திமா இந்த குற்றத்தைச் செய்திருந்தாலும் நான் தண்டனை கொடுக்காமல் விடமாட்டேன் என்று கூறினார்கள்.

இன்றைக்கு இந்த நீதி, நேர்மை முஸ்லிம்களிடமிருந்து முற்றிலும் மறைந்து விட்டது. அதுவே இவர்களின அழிவுக்கு காரணமாகிக் கொண்டிருக்கிறது. நாம் இவ்விசயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது பொறுப்பாளர்களும் கூட நீதியின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும். அத்தகைய தகுதியை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் இது ஆபத்தானதாகும். அழிவுக்கு காரணமானதாகும். பிறகு எதிரிகளிடம் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பது திருக்குர்ஆனின் கட்டளையாகும். இது சம்பந்தமாக என்ன முன்மாதிரியை காட்டினார்கள். அதற்கு ஓர் உதாரணம் தருகிறேன்.

சஹாபாக்களில் சிலரை ஓரிடத்திற்கு செய்தி சேகரிப்பதற்காக அனுப்பினார்கள். அவர்கள் ஹரம் எல்லைக்குள் சென்றபோது, சிலர் பார்த்து விட்டனர். அவர்கள் இவரை நன்கறிந்தவர்கள். நிச்சயமாக மக்காவில் சென்று கூறி விடுவர் என்று அவர் அறிந்திருந்தார். அதன் அடிப்படையில் அந்த சஹாபா அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தார். அதில் ஒருவரை கொன்று விட்டார். அந்த சஹாபா மதீனா திரும்பியதும், ஒரு கூட்டம் மக்காவிலிருந்து புகார் செய்வதற்காக மதீனாவிற்கு வந்து விட்டனர். இவ்வாறு ஹரம் எல்லைக்குள் இம்மனிதர் ஒருவரை கொன்று விட்டார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நீங்கள் அதே ஹரம் எல்லையில் முஸ்லிம்கள் மீது எவ்வளவு கொடுமை இழைத்தீர்கள். அவற்றை மறந்து விட்டீர்களா? என்று கேட்டிருக்கலாம். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். சரி, ஹரமில் அடைக்கலம் பெற்று விடலாம் என்ற எண்ணத்தில் அம்மக்கள் அந்த சஹாபாக்களை எதிர்க்காமல் இருந்திருக்கலாம். நாம் உயிர் தப்பி விடுவோம் என்று நினைத்திருக்கக் கூடும். உங்கள் மீது அநீதியிழைக்கப்பட்டுள்ளது. அதற்காக ஈட்டுத்தொகை தரப்படும் என்றார்கள். அரபிகளின் வழக்கப்படி ஈட்டுத்தொகை தரப்பட்டது. எனவே இதுவே நீதியின் தகுதியாகும். இதனை நீதிமான் நபி (ஸல்) அவர்கள் எல்லா இடத்திலும் நிலைநாட்டினார்கள். மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பதிலும் எவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்திருந்தார்கள் என்று பாருங்கள்.

ஒரு யஹூதி, அவர்களிடம் முறையிட்டார். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் என் உள்ளத்தை காயப்படுத்தி விட்டார் என்றர். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை விட சிறந்தவர் ஆக்கியுள்ளான் என்று இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன் என்று அபூபக்கர் கூறுகிறார். இதனைக் கேட்டு தனக்கு வருத்தம் ஏற்பட்டதாக யஹூதி புகார் கூறினார். இதுவும் உண்மை தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களை விடவும் சிறந்தவர்கள் தான். திருக்குர்ஆன் கூட அதற்கு சாட்சியம் அளிக்கிது. ஆனால் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்கரை அழைத்து விசாரித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர்

கூறினார்கள். அம்மனிதன் தான் முதலில் ஆரம்பித்தார். நான் மூஸாவின் மீது சத்தியமிட்டுக் கூறுகிறேன். இறைவன் மூஸாவுக்கு முழு உலகின் மீதும் மேன்மை வழங்கியுள்ளான் என்றார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அப்படி அவர் கூறினாலும் கூட நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டாம். பிறரது உணர்வுகளை மதிக்க வேண்டும். இதுதான் பிறரது உணர்வுகளை மதிக்கும் பண்பாகும்.

மனித குலத்திற்கு சேவை செய்பவர்களை அன்னார் எவ்வாறு மதித்தார்கள் என்பது பற்றி அறிவிப்பில் வருகிறது.

தாயா கூட்டத்தினர் முஸ்லிம்களிடம் சண்டையிட்டனர். அதில் சிலர் கைது செய்யப்பட்டனர். அதில் அரபிகளின் பிரபல வள்ளல்தன்மை கொண்ட ஹாத்திம் என்பவரின் மகளும் இருந்தாள். அவர்களுக்கு அது தெரிய வந்ததும் அன்னார் அப்பெண்ணிடம் கருணையின் நடைமுறையை காட்டினார்கள். அப்பெண்ணின் பரிந்துரையின் பேரில் எல்லாரையும் விடுவித்தார்கள். இதுவே மனித குலத்தின் பேருபகாரியாக விளங்கியவரின் மனிதகுல சேவகர்களிடம் காட்டிய மரியாதையாகும். பெண்களின் கண்ணியத்தை அவர்கள் எந்த அளவுக்கு நிலைநாட்டினார்கள்!

அரபிகள் தமது நாட்டின் வழக்கத்திற்கேற்ப பெண்களை அடிப்பதுண்டு. அது தெரிய வந்த போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்கள் இறைவனின் அடிமைகள் ஆவர். உங்களது அடிமைகள் அல்லர்.

ஒரு சஹாபி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார். மனைவிக்கு தர வேண்டிய உரிமைகள் யாவை? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறைவன் உமக்கு உண்பதற்காக வழங்கியதை அவர்களுக்கும் வழங்குங்கள். இறைவன் உங்களுக்கு அணியத் தந்ததை அவர்களுக்கும் அணியக் கொடுங்கள். அவர்களின் முகத்தில் அடிக்க வேண்டாம். அவர்களை ஏச வேண்டாம். அவர்களை வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டாம்.

இக்காலத்திலும் இதுபோன்ற சம்பவங்களை கேள்விப்படுகிறோம். அவர்களும் சிந்திக்க வேண்டும். ஒருபுறம் அல்லாஹ்விடம் துஆ கேட்கின்றனர். மறுபுறம் அவனது கட்டளைகளுக்கு மாற்றமாக நடக்கின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் சிறந்தவர் தமது குடும்பத்தினருடன் நல்ல முறையில் நடப்பவர்தான். நான் உங்கள் எல்லாரையும் விட நல்ல முறையில் நடப்பவனாவேன்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, அன்னாரது அரசு நிர்வாகம் மற்றும் தர்பிய்யத் பணிகள் மிகுதியாக இருந்தது. இபாதத் செய்யும் பணியும் இருந்தது. இவையெல்லாம் இருந்தும் கூட வீட்டு வேலைகளையும் பொறுப்புகளையும் கூட அழகிய முறையில் செய்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். எவ்வளவு நேரம் அவர்கள் வீட்டில் இருந்தாலும் வீட்டினருக்கு தொண்டு செய்வதிலும் உதவி செய்வதிலும் ஈடுபட்டிருப்பார்கள். அவர்களின் மற்ற பணிகளால் வீட்டு வேலைகள் பாதிக்கப்படுவதில்லை. துணிகளை தைப்பார்கள். ஆட்டின் பாலைக் கறப்பார்கள். தாமதமாக வீட்டிற்கு வந்தால் உணவை அல்லது பாலை தாமே எடுத்து அருந்துவார்கள். வீட்டினரை எழுப்பமாட்டார்கள். சிலர் தாம் வீட்டு வேலை செய்வது பாவமாகி விடும் என்று கருதக் கூடியவர்கள் இருக்கின்றனர். தாமதமாக வீட்டிற்கு வந்தால் மனைவி எழுந்து கண்டிப்பாக உணவை சூடாக்கித் தர வேண்டும். இது அவளது கடமை என்று கருதுகின்றனர். அவ்வாறு செய்யா விட்டால் வீட்டினருக்கு நம் மீது பயம் போய்விடும் என்றெல்லாம் கருதக் கூடியவர்களுக்கு இந்த முன்மாதிரியில் ஒரு பாடம் உள்ளது. சிலருக்கு மனைவி இடத்தில் கூச்சலிடா விட்டால் நிம்மதியே இருக்காது.

சிலரைப் பற்றி புகார் வருகிறது. அம்மக்கள் நல்ல முறையில் ஜமாஅத் வேலை எல்லாம் செய்கின்றனர். அவர்களது வெளி வேலைகள் நன்றாக உள்ளன. ஆனால் வீட்டில் மனைவியின் மீது அவர்கள் காட்டுகின்ற கடுமையைப் பார்த்தால் மிகவும் வியப்பாக உள்ளது. எப்படி மனிதன் வெளியில் அப்படியும் உள்ளே இப்படியும் இருக்கிறார் என்று வியப்பாக உள்ளது. அவரது நடைமுறையில் இரட்டை வேடம் உள்ளது. பிறகு இன்னும் சிலர் ஆண்களின் உறவு முறைகளை சீர்கெடுக்கிறார்கள். சகோதரிகள், தாய்மார்கள் இதனை செய்கிறார்கள். ஒரு விருந்தாளிக்காக ஆண், தேனீர் தயாரித்து எடுத்து வந்தால் இவர் மனைவிக்கு

அடிமையாகி விட்டார் என்று கூறப்படுகிறது. இவருக்கு என்னவாயிற்று? இவர் மனைவி எப்படிப்பட்டவளாக இருக்கிறாள்? நமது சகோதரரிடம் அல்லது எமது மகனிடம் வேலை வாங்குகிறார்! பாவம் நமது சகோதரர்! பாவம் நமது மகன்! வீட்டு வேலையெல்லாம் அவன் செய்கிறான்! என்று கூறுகின்றனர்.

இதனால் ஆண்களின் மூளை கெட்டுப்போகிறது. சிலர் மனைவியரிடம் கடுமை காட்டத் தொடங்குகின்றனர். ஆனால் இந்த மக்கள் அப்பாவியாக இருப்பது, இந்தப் பணியை செய்ததனால் அல்ல. இவர்களோ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது சுன்னத்தை பின்பற்றியதால் நன்மைகளை சம்பாதிக்கின்றனர். அல்லாஹ்வின் உண்மையான அடியாராக முயல்கின்றனர்! ஆனால் மனைவியின் மீது கடுமை காட்டி இறை பிடியின் கீழ் வரும்போது மனிதன் அப்பாவி மனிதன் ஆகி விடுவான். நீங்கள் ஈமான் கொண்டதாக வாதித்து உயர் நல்லொழுக்கத்தை தான் காட்டுகிறீர்களா? நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தினீர்களா? ஒருபுறம் வாதம் ஒன்று? மறுபுறம் செயலில் காட்டுவது ஒன்றா? என்று கியாமத் நாளன்று கேட்கப்படும். எனவே அத்தகைய ஆண்களும் கவலைப்பட வேண்டும். குழந்தைகளிடம் அன்பு நேசத்தின் என்ன முன்மாதிரியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காட்டினார்கள்?

அறிவிப்பில் வருகிறது. அன்னார் தமது குழந்தைகள் மற்றும் உடன் இருக்கின்ற குழந்தைகளுக்காக துஆசெய்து வந்தார்கள். அல்லாஹ்வே! நான் இவர்களிடம் நேசம் கொள்கிறேன். நீயும் இவர்களிடம் நேசம் கொள்வாயாக! குழந்தைகளுக்கு ஒருபோதும் தண்டனை கொடுத்ததில்லை. அன்பு துஆவுடன் தர்பிய்யத் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள். எப்போது பழம் வந்தாலும் பழங்களின் பரக்கத்திற்காக துஆ செய்வார்கள். பழங்களிலிருந்து முதல் பழத்தை சபையிலுள்ள எல்லாரையும் விட சிறிய குழந்தைகளுக்கு முதலில் வழங்குவார்கள். குழந்தைகளுடன் விளையாடினார்கள் என்றும் கூட அறிவிப்பில் வருகிறது. பெரும்பாலான பெற்றோர் குழந்தைகளிடம் அன்பு செலுத்துகின்றனர். ஆனால் சிலர் காரணமில்லாமல் குழந்தைகளுக்கு தண்டனை தருகின்றனர.

சில நாட்களுக்கு முன் என்னை ஓர் இளைஞர் சந்தித்தார். அவர் கூறினார். நான் எப்போதும் பயம் உள்ளவனாக இருக்கிறேன். டெப்ரெஸ்ஸன் என்ற நோயை உடையவராக உள்ளேன். பிறகு மனநோய்க்கு ஆளாகி விட்டார். காரணம், எனது தந்தை எப்போதும் என்னை அடித்துக் கொண்டே இருப்பார். காரணமில்லாமல் ஏன் குழந்தைகளை அடித்தீர்கள்? என்று கேட்டால், குழந்தைகளுக்கு பயம் ஏற்படுவதற்கு இது மிகவும் அவசியமாகும் என்று கூறுவார். இதுவும் சில பெற்றோரின் நிலையாகும். அவ்வாறும் சில அநீதியிழைக்கும் தந்தையர்கள் உள்ளனர்.

இங்கும் சில சம்பவங்கள் வருகின்றன. இன்றைய நாட்களில் செய்தித்தாளில் சில சம்பவங்கள் வெளி வருகின்றன. சில பெற்றோர் தமது உல்லாச வாழ்க்கைக்காக குழந்தைகளை கொன்று விடுகின்றனர். சிலர் தமது குழந்தைகள் மீது அன்பு காட்டுகின்றனர். ஆனால் பிறரது குழந்தைகளை சகிக்க முடிவதில்லை. அவர்களிடம் அன்பு செலுத்துவதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது முன்மாதிரியாவது, ஒவ்வொரு குழந்தைகளிடமும் அன்பும் நேசமும் காட்டுவதாகவே இருந்தது. அண்டை வீட்டுக் காரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பது திருக்குர்ஆனின் கட்டளையாகும். இதிலும் மிக உயரிய முன்மாதிரியை அவர்கள் காட்டினார்கள். மீண்டும் மீண்டும் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு நற்போதனை செய்தார்கள்.

ஒருமுறை அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! அம்மனிதன் ஒருபோதும் மூஃமின் அல்ல. ஒருபோதும் மூஃமின் அல்ல. ஒருபோதும் மூஃமின் அல்ல. சஹாபாக்கள் கேட்டனர். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! யார் மூஃமின் இல்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவரது அண்டை வீட்டுக்காரர்கள் ஒருவரது தீமையிலும் தீய ஒழுக்கத்திலும் இருந்து பாதுகாப்பாக இருக்க முடியவில்லையோ அவர் மூஃமின் இல்லை. இந்த சில விசயங்களை நான் குறிப்பிட்டுள்ளேன். உறவினர்களிடம் நல்ல நடைமுறையாகட்டும்! ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கும் நடைமுறை ஆகட்டும்! சகிப்புத்தனமை, மன்னிக்கும் நடைமுறையாகட்டும்! குறைகளை துருவித் துருவிப் பார்ப்பதை தவிர்க்கும் விசயமாகட்டும்!

நல்லெண்ணம் கொள்ளும் விசயமாகட்டும்! எந்த நல்லொழுக்கமாயினும் அவர்களின் முன்மாதிரி எல்லா இடத்திலும் நமக்கு கிடைக்கிறது. எல்லா விசயத்திலும் முழுமையான முன்மாதிரி ஒரு புரட்சியை ஏற்படுத்தி அக்காலத்தின் அறிவீனர்களை இறை மனிதர்களாக மாற்றியது. அந்த அப்து ஆவதன் கடமையை நிறைவேற்ற வேண்டும். இதற்கு அவர்களின் முன்மாதிரியின்படி நடந்தே ஆக வேண்டும். அப்போது தான் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகி நாம் நமது உலகையும் மறுமையையும் பெற முடியும்.

எனவே துஆ செய்யுங்கள். இன்றும், எஞ்சியிருக்கிற ஓரிரு ரமலானின் நாட்களிலும் துஆ செய்யுங்கள். துஆ ஏற்றுக் கொள்ளப்படும் மாதமாகும். வாழ்நாள் முழுவதும் இறைவன் நம்மை உண்மையான மூஃமின் ஆக்குவானாக! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரியின்படி செல்பவர்களாவோமாக! கடைசியில் நான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோளை வைக்கிறேன்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

இறைவன் முஸ்லிம்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மாதிரியின்பட நடக்குமாறு கட்டளையிட்டுள்ளான். அவர்களின் ஒவ்வொரு சொல்லையும் செயலையும் பின்பற்றுங்கள். இந்த வகையில் இறைவன் கூறினான். *லகத் கான லகும் பி ரஸூலில்லாஹி உஸ்வதுன் ஹஸனா.* பிறகு கூறுகிறான். *இன் குன்தும் துஹிப்பூனல்லாஹ ஃபத்தபிவூனி யுஹிப்பிப்குமுல்லாஹ்.* ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சொற்கள், செயல்கள் பலவீனத்தை விட்டு அகன்றதாக இருக்கா விட்டால், நம் மீது அவர்களின் முன்மாதிரியின்படி செல்வது ஏன் வாஜிபாக்கப்படப் போகிறது?

பிறகு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது நல்லொழுக்கம் மற்றும் அமல்களை தனது வழிகாட்டியாக ஆக்காத வரை அல்லாஹ்வின் முஹப்பத்தை முழுமையான முறையில் தனக்குள் உருவாக்க முடியாது.

எனவே இறைவன் கூறுகிறான். குல் *இன் குன்தும் துஹிப்பூனல்லாஹ ஃபத்தபிவூனி யுஹிப்பிப்குமுல்லாஹ்.* அதாவது இறைநேசம் பெறுவதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது அவசியமாகும். உண்மையான பின்பற்றுதல் என்பது அவர்களது உயர் நல்லொழுக்கத்தின் நிறத்தை தன் மீது ஏற்படுத்துவதாகும்.

கூறினார்கள்: ஈடேற்றம் நமது முயற்சியால் கிடைப்பதல்ல. இறைவனது அருளினால் கிடைக்கிறது. அந்த அருளைப் பெறுவதற்கு இறைவன் ஒரு சட்டத்தை வைத்துள்ளான். அதனை ஒருபோதும் வீணாக்கமாட்டான். அந்த சட்டம் எதுவெனில், *இன் குன்தும் துஹிப்பூனல்லாஹ ஃபத்தபிவூனி யுஹிப்பிப்குமுல்லாஹ். வமன் யப்தகி கைரில் இஸ்லாமி தீனன் ஃபலய் யுக்பல மின்ஹு (3:86)*

அல்லாஹ்வின் திருப்தியை விரும்பினால் அத்தகையவர்களுக்காக அறிவிக்கச் செய்தான். என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். இரண்டாவது வசனத்தின் பொருள்: ஒருவர் இஸ்லாத்தைத் தவிர வேறு மார்க்கத்தை விரும்பினால் அது அவரிடமிருந்து ஒருபோதும் ஏற்கப்படாது. இஸ்லாம் ஒரு மார்க்கமாகும். இஸ்லாம் என்றால் என்ன? அது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் ஆகும்.

அல்லாஹ் நம்மை இந்த உண்மையை புரிந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குவானாக! இந்த ரமலான் நம்மை இந்த விசயத்தைப் பற்றி சரியான புரிதலைத் தந்தவாறு விடை பெறட்டுமாக! வரக்கூடிய ரமலான் வரை நாம் இந்த முன்மாதிரியின்படி நடந்தவாறு புதிய இலக்குகளைப் பூர்த்தி செய்துகொண்டே செல்வோமாக!

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON.
**ON 17.08.2012**

Translated by : Muallim M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456